# நவம்பர்- 03 – சனி

**“தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர் தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்”லூக் 14:11**

## முதல் வாசகம் : பிலிப்பியர் 1 : 18 – 26

சகோதர சகோதரிகளே! அதனாலென்ன? அவர்களது நோக்கம் போலியாக அல்லது உண்மையாக இருக்கலாம். எப்படியும் கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார். இதனால் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆம், இனியும் மகிழ்ச்சியடைவேன் .இவ்வாறு உங்கள் மன்றாட்டும் இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் துணையும் என்விடுதலைக்கு வழிவகுக்கும் என நான் அறிவேன். என்னநேர்ந்தாலும் வெட்கமுறமாட்டேன். இன்றும் என்றும், வாழ்விலும் சாவிலும் முழுத்துணிவுடன் கிறிஸ்துவை என் உடலால் பெருமைப்படுத்துவேன். இதுவே என் பேராவல், இதுவே என் எதிர்நோக்கு. ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே. எனினும் நான் தொடர்ந்து வாழ்ந்தால் பயனுள்ள பணி செய்ய முடியும். எனவே நான் எதைத் தேர்ந்துகொள்வதென எனக்குத் தெரியவில்லை.இந்த இரண்டுக்குமிடையே ஒரு இழுபறி நிலையில் உள்ளேன். உயிர் நீத்துக் கிறிஸ்துவோடு இருக்க வேண்டும் என்னும் ஆவல் ஒரு புறம். இதுவே மிகச் சிறந்தது. ஆனால், இன்னும் வாழவேண்டும் என்பது மற்றொரு புறம். இது உங்கள் பொருட்டு மிகத்தேவையாய் இருக்கின்றது. நான் உங்களோடிருப்பதால் நீங்கள் நம்பிக்கையில் வளர்ச்சி பெற்று மகிழ்ச்சியடைவீர்கள். எனவே உங்கள் அனைவரோடும் தொடர்ந்து தங்கியிருப்பேன் என உறுதியாக நம்புகிறேன்.ஆகவே, நான் உங்களிடம் மீண்டும் வருவதால், கிறிஸ்து இயேசுவின் உறவில் வாழும் நீங்கள் என் பொருட்டு இன்னும் மிகுதியாகப் பெருமிதம் கொள்வீர்கள்.

**பதில்பாடல் :** உயிருள்ள இறைவன் மீது என் நெஞ்சம் தாகம் கொண்டுள்ளது.

## நற்செய்தி : லூக்கா 14 : 1, 7 - 11

அக்காலத்தில் ஓய்வுநாள் ஒன்றில் இயேசு பரிசேயர் தலைவர் ஒருவருடைய வீட்டிற்கு உணவருந்தச் சென்றிருந்தார். அங்கிருந்தோர் அவரைக் கூர்ந்து கவனித்தனர். விருந்தினர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தேர்ந்து கொண்டதை நோக்கிய இயேசு அவர்களுக்குக் கூறிய அறிவுரை : ”ஒருவர் உங்களைத் திருமண விருந்துக்கு அழைத்திருந்தால், பந்தியில் முதன்மையான இடத்தில் அமராதீர்கள். ஒருவேளை உங்களைவிட மதிப்பிற்குரிய ஒருவரையும் அவர் அழைத்திருக்கலாம். உங்களையும் அவரையும் அழைத்தவர் வந்து உங்களிடத்தில், ”இவருக்கு இடத்தை விட்டுக்கொடுங்கள்” என்பார். அப்பொழுது நீங்கள் வெட்கத்தோடு கடைசி இடத்திற்குப் போக வேண்டியிருக்கும். நீங்கள் அழைக்கப்பட்டிருக்கும்போது, போய்க் கடைசி இடத்தில் அமருங்கள். அப்பொழுது உங்களை அழைத்தவர் வந்து உங்களிடம், ”நண்பரே, முதல் இடத்திற்கு வாரும்” எனச் சொல்லும்பொழுது உங்களுடன் பந்தியில் அமர்ந்திருப்பவர்கள் யாவருக்கும் முன்பாக நீங்கள் பெருமை அடைவீர்கள். தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர் தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்” என்றார்.

**தியானம்:** இன்று பலர் தம்மை உயர்வாக காட்டுவதில் அதிக அக்கறை காட்டுகின்றார்கள். பொருளாதார ரீதியாகவோ, ஆடை அலங்காரங்களின் வழியாகவோ, அல்லது தாம் வைத்திருக்கும் பொருட்களின் மூலமோ தம்மைப் பற்றி சுய விளம்பரம் செய்வதில் பெருமை கொள்கிறார்கள். அது அவர்களுக்கு அதிக திருப்தியையும் சந்தோஸத்தையும் தருவதாக கருதுகின்றார்கள். பலர் கூடும் சபைகளில் தம்மை முதன்மைப் படுத்த நினைப்பதும், தம் கருத்துக்களை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பதும் உண்டு. இது தனி மனித வாழ்வில் மட்டும் அல்ல பல நாடுகளிலும் உண்டு. பல பெரிய நாடுகள் தம்மை வல்லரசாக காட்டிக் கொள்ள ஆசைப்படுகின்றன. இதனால் மற்றைய நாடுகள் தமக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று நினைக்கின்றன. இது முற்றிலும் தவறு என்பதனை இன்றைய நற்செய்தி எமக்கு சுட்டி காட்டுகின்றது. முதன்மையான இடங்களை தேட வேண்டாம் என்கிறார் யேசு. முதன்மை நிலையை அடைய முயற்சிப்பது தவறல்ல. ஆனால் அது மற்றவர்களால் ஏற்படுத்தப்பட வேண்டுமே ஒழிய நாமாக நம்மை முதன்மைப் படுத்தக் கூடாது. கிறிஸ்த்தவர்களாகிய நமக்கு யேசுதான் முதன்மையானவர் என்பதனை இன்றைய முதல் வாசகம் எடுத்துக் காட்டுகின்றது. நமது வாழ்வும், நாம் செய்யும் செயல்களும் மக்கள் முந்நிலையில் பேசப்படவேண்டும் என்றோ, அதனால் எமக்கு சமுதாயத்தில் உயர்ந்த இடம் கிடைக்கும் என்றோ எண்ணி நாம் செய்யக் கூடாது. அது கடவுளுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். இன்றும் எத்தனையோபேர் இலைமறை காயாக வெவ்வேறு வழிகளில் பலருக்கு உதவி செய்கின்றார்கள். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். எனவே நாமும் மற்றவர்களுக்கு காட்டவேண்டும் என்ற எண்ணத்துடன் செய்யாமல், தேவைப்படும் மக்களுக்கு எம்மால் முடிந்த உதவிகளை செய்ய முன்வருவோம்.